


**22. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா சைப்ரஸ் நாடுகளிடையே அடுத்த 5 ஆண்டுகளில் முதலீடுகளை இருமடங்காக்க திட்டமிட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாட்டில் காலியகாக உள்ள ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடத்திற்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெறுகிறது.

3. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திரு. வன்னி அரசும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் திரு. ஷாஜஹான் ஆகிய இருவரும் தமிழக அமைச்சர்களாக இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

4. தமிழகத்தில் திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிய திறனாய்வு குழு அமைக்கப்படும் என்று மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

5. ஜெனிவா ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியா சைப்ரஸ் இடையேயான நட்புறவு வலுவாக உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சைப்ரஸ் அதிபர் நிக்கோஸ் கிறிஸ்டோடு லைடிஸ் உடன் இணைந்து பேசிய பிரதமர், சைபர் பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளில் இருநாடுகளுக்கான ஒத்துழைப்பை மேலும் விரிவுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

ஜனநாயகம் சட்ட விதிகள் போன்ற மதிப்பீடுகள் இருநாடுகளின் நட்புறவில் இன்றியமையாததாக திகழ்வதாகவும், பிற நாடுகளின் எல்லைகளின் இறையாண்மையை இந்தியா மதிப்பதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இக்கொள்கைகளில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்று தெரிவித்த பிரதமர், இந்தியாவில் சைப்ரஸ் நாட்டின் முதலீடு கடந்த 10 ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளது என்றார்.

இருநாடுகளுக்கு இடையே நம்பகத்தன்மை அதிகரித்து உள்ளதாக பெருமிதம் தெரிவித்த பிரதமர், இந்தியா ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய வாய்ப்புகளுக்கு வழிகோலியிருப்பதாக கூறினார்.

இதன் அடிப்படையில் அடுத்த 5 ஆண்டுகளில் முதலீடுகளை இருமடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்படுவதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்

இச்சந்திப்பின் போது இருநாடுகளிடையே தீவிரவாத தடுப்பிற்கான கூட்டு பணிக்குழு, தேடுதல் மற்றும் மீட்புப்பணிகளில் பயிற்சி, உயர்கல்வி, கலாச்சார ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் அட்டவணை

மாநிலங்களவையில் காலியாக உள்ள 24 உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தலும்,

தமிழ்நாடு, மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இரண்டு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான இடைத்தேர்தலும் அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெறுகிறது.

இதன்படி, ஆந்திரா, குஜராத், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் தலா 4 இடங்களும்,

ராஜஸ்தான் மத்திய பிரதேசத்தில் தலா 3 இடங்களும்,

ஜார்கண்டில் 2 இடங்களும்,

மணிப்பூர் மேகலாயா, அருணாச்சல பிரதேசம், மிசோரம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடங்களும் காலியாக உள்ளன.

மஹாராஷ்டிர துணை முதலமைச்சர் திரு. சுனேத்ரா அஜித்பவார் மற்றும்

அஇஅதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் ஆகியோர் அந்தந்த மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதை தொடர்ந்து இந்த 2 இடங்கள் காலியாக உள்ள நிலையில் இதற்கான இடைத்தேர்தலும் அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெறுகிறது.

இதற்கான அறிவிக்கை அடுத்தமாதம் ஒன்றாம் தேதி வெளியிடப்படும் என்றும்,

வாக்குப்பதிவு அடுத்தமாதம் 18-ம் தேதி நடைபெற்று என்றும் தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை அன்றைய தினமே நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டின் ஒருங்கிணைந்த மற்றும் விரிவான பாதுகாப்பு கட்டமைப்பின் அவசியம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எல்லை பாதுகாப்பு படையின் விருது வழங்கும் விழாவில் பேசியஅவர், சர்வதேச பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்கான பணியில் இப்படையினர் நாட்டின் பெருமையை தொடர்ந்து நிலைநிறுத்தி வருவதாக பெருமிதம் வெளியிட்டார்.

பாதுகாப்பு பணிகளில், மாநில காவல்துறை, மத்திய ஆயுதப்படைகள், உளவு முகமைகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கூடுதல் ஒருங்கிணைப்பு மிகவும் இன்றியமையாதது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

நாட்டில் அனைத்து உயிரினங்களுக்கும் ஒரு பொதுவான எதிர்காலத்தை கட்டமைக்க வேண்டியதன்

அவசியம் குறித்து மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம் இன்று கடைபிடிக்கப் படுவதை ஒட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் பல்லுயிர் பெருக்க இழப்பை தடுத்து அதனை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

குவாட்

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த குவாட் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் புதுதில்லியில் வரும் 26-ம் தேதி நடைபெற உள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் குவாட் அமைப்பின் செயல்பாடுகள் குறித்து வாஷிங்டனில் நடைபெற்ற விவாதங்களின் தொடர்ச்சியாக பல்வேறு முன்னெடுப்புகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜாராம் மோகன்ராய்

சமூக சீர்த்திருத்தவாதியான ராஜாராம் மோகன் ராயின் பிறந்த நாளை ஒட்டி மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் தொலைநோக்கு சிந்தனையாளரான அவரது முற்போக்கு கொள்கைகளும், சமூக சீர்த்திருத்தத்தின் மீதான அர்ப்பணிப்பும் நாட்டு மக்களுக்கு என்றென்றும் உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

தமிழக அமைச்சரவை

தமிழக அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திரு. வன்னிஅரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராகவும்,

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் திரு. ஷாஜஹான் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராகவும் இன்றுகாலை பதவியேற்றுக் கொண்டனர்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ஆர்.வி. அர்லேக்கர் அவர்களுக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

இவர்களையும் சேர்த்து தமிழக அமைச்சரவையின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. விஜய், மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆதவ் அர்ஜுனா

தமிழகத்தில் திறமையான இளம் விளையாட்டு வீர வீராங்கனைகளை கண்டறிந்து பயிற்சி அளிக்கும் வகையில் திறனாய்வு குழு அமைக்கப்பட உள்ளதாக மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் ஒலிம்பிக் பவன் அமைக்கப்படும் என்று கூறிய அவர், வரும் 2028-ம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவுள்ள கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்தோர் வெற்றியாளர்களாக திகழ உரிய பயிற்சிகள் வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீநாள் கூட்டம் வரும் 29-ம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் பறவை காய்ச்சல் எதிரொலியாக ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே பன்னாரியில் கால்நடை துறை சார்பில் சோதனை சாவடி அமைக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்யும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில்,

திருச்சி மாவட்டத்தில் இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சரவணன் இன்று துவக்கிவைத்தார்.

700-க்கும் மேற்பட்ட பள்ளி பேருந்துகளில் வட்டார போக்குவரத்து அலுவலர் தலைமையில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

ஏற்காடு

சேலம் ஏற்காட்டில் இன்று தொடங்கிய 49-வது கோடைவிழா மற்றும் மலர் கண்காட்சியை ஆயிரக்கணக்கானோர் கண்டு ரசித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

மதுரை வாய்ஸ்

கிருஷ்ண ஜெயந்தி வரும் செப்டம்பர் 4-ம் தேதி கொண்டாடப் படுவதை ஒட்டி மதுரை திருப்பரங்குன்றம் விழாச்சேரியில் 200-க்கும் மேற்பட்டோர் களிமண்ணால் ஆன பொம்மைகள் தயாரிக்கும் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

ஒகேனக்கல்

கோடை விடுமுறையை ஒட்டி தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா தளங்களில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

தர்மபுரி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் சுற்றுலா பயணிகளின் வருகை குறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும்

மாநிலங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் குவிந்துள்ளதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

காலை முதல் இரவு வரை இடைவிடாது பல்வேறு மொழிகளில் திருப்பலிகள் நடைபெற்று வருகின்றன.

பக்ரீத் பண்டிகையை ஒட்டி ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற வாரச்சந்தையில் விற்பனை தொடங்கிய 5 மணி நேரத்திற்குள்ளாகவே 3 கோடி ரூபாய் அளவிற்கு ஆடுகள் விற்பனை நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

ஜெனிவா ஓப்பன் டென்னிஸ் ஆடவர் டென்னிஸ் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை – செக் குடியரசு இணையை இன்றுமாலை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன் ரைசர்ஸ் ஹைதராபாத் – ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுருவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖